உ

சிவமயம்.

சிவத்துரோக கண்டன திக்கார தண்டனம்.

இஃது

யாழ்ப்பாணத்துச்

சைவ பரிபாலன சபையின்

கௌரவப் பிரசாரகரால்

இயற்றப்பட்டது.

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

துர்முகிஞு ஆவணிமீ.

சிவமயம்.

சிவத்துரோக கண்டன திக்கார தண்டனம்.

வெற்றிவேற் பிள்ளையே!

நீர் வெளிப்படுத்திய "சிவத்துரோக கண்டனம்" என்னும் அபத்த பரிபூரண பத்திரங் கண்டனம். அதன் கணுள்ள வாக்கியப்போக்குக்கள் அம்பலவாண பிள்ளையை அடிக்கடி வெளிப்படுத்தினுங் கைச்சாத்திட்ட நீரே விளித்துரையாடற் கிலக்காவீர்! ஆயினும் அங்கேதான் செல்லும்!

பிள்ளையே!

முதலிலே "சைவசமயிகளே, வித்துவான்களே," என்றீர்! பின் வித்துவான்களை விடுத்துச் "சைவசமயிகளே, நன்ருகக் கவனியுங்கள்" என்றீர்! அதன்பின் பிள்ளாய்பிள்ளாய் என்றீர்! அப்பால் "நாராயணச் செட்டியாரே" என்றீர்! அதற் கப்பாலுஞ் "சைவ சமயிகளே" என்றீர்! இடையிலுஞ் "சைவ சமயிகளே" என்றீர்! இவை என்னே! கழிக்கரைப் புலம்பலா! கசடறக் கல்லார் அலம்பலா! நும் வழூஉக்களை விரிப்பிற்கடற்கரை மணலினும்மிகப் பல்கும்! அவை நிற்க. சுருக்கமாகச் சில உரைப்பாம்.

பிள்ளையே !

"பக்குவான்மா-சீவன்" என்றும், "நாயகி - பெண்டாட்டி" என்றும், "நாயகன்-புருஷன்" என்றும் பதப் பொருளும் உரைத்தீர்! இவற்றிற்குப் பிரமாணம் யாவை! "பக்குவான்மா" என்புழிப் பக்குவம் என்பதை வாளா விடுத்தீர்! பெண்டாட்டி முடிபென்னை ! அது நாயகி என்பதற்குப் பரியாயமாகுமா ? நாயகன்பெயரும் வேறு! புருடன் பெயரும் வேறு என்பதை நிகண்டு கற்குஞ்சிறுவரும் அறிவர் ! நீரறியாதது பேரதிசயம் ! "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத்தூறு மறிவு." என்பதை நும்பாற் கண்டனம். உமக்கேன் கண்டனம் ?

திருக்கோவையா ருண்மையிலே அற்பனுகிய பக்குவான்மாவை நாயகனுக்கி மகானுகிய சிவபிரானை நாயகியாக்கியது சிவத்துரோகம் என்றும், தேவார திருவாசகங்கள் அங்ஙனங் கூருது சிவபிரானை நாயகனுகவும் சீவனை நாயகியாகவுங் கூறுகின்றன என்றுங் கூறினீர் !

பிள்ளையே !

சிவபிரானை 'இப்படியனிந்நிறத்த னிவ்வண்ணத்தன்' என்று யாவர் சொல்லுவார் ! அவரோ மனுதிகளுக் கெட்டாத பரமானந்தவாழ்வு ! ஆணுமல்லர் ! பெண்ணு மல்லர்! அலியு மல்லர் ! அருவுமல்லர் ! உருவு மல்லர் ! சித்து மல்லர் ! அசித்து மல்லர் ! மற்றையவு மல்லர் ! ஆயினும், ஆணுமாவர் ! பெண்ணுமாவர் ! அலியுமாவர் ! அருவுமாவர்! உரு

வுமாவர் ! சித்துமாவர் ! அசித்துமாவர் !மற்றையவு மாவர்! நாயகனு மாவர் ! நாயகியு மாவர் ! இவ்விருவரு மொருவரே யெனவு மாவர் ! " நானிவளாம் பகுதிப் பொற்பாரறிவார்." என்பது திருக்கோவை. " ஒருவனே யிராவணாதி பாவகமுற் றுற் போலத், தருவ னிவ்வுருவ மெல்லாந் தன்மையுந் திரி யானுகும்." என்னுஞ் சித்தியாரையும் நோக்கிலீர் ! அவ ரியல்பை அறிதற்கு அம்பலவாண பிள்ளை யாவர்! நீர்யாவர்! பிள்ளையே !

கோவையாரிலே சொல்லிய இரந்து பின்னிற்றல், வருந்தி மடலேறுதல், வழிபடுதன் முதலிய இழிதொழில்களெல்லாம் நாயகன் பாலனவா? நாயகி பாலனவா? அங்கே விசிட்டமுடையவரும் முந்தியவரும் யாவர்? நாயகியா? நாயகரா? கோவையாரிலே, "சொற்பால முதியவள் யான்சுவை" என்புழி நாயகியை அமுது என்றும், நாயகனைச்சுவை என் றுங் கூறவில்லையா? நாயகருக்கு இன்பங் கொடுப்பவர் யாவர்? நாயகிகளன்றோ! "கொடியிடைதோள், புணர்ந்தாற் புணருந் தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரிகுழ லாளல்குல்போல வளர்கின்றதே." என்பதைக் கோவையாரிற் கண்டிலீரோ ! இறையனாரகப் பொருளிலே "கொடுமையில்லைக் கிழவிமேன." என்பத னுரையிலே " தக்காளெனப்படுவ தல்லது தகாளெனப் படுதலிலள்." என்று தலைவியை உயர்த்த வில்லையா ? வருந்தி இரந்து வழிபட்ட ஆன்மாக்களுக்குப் பேரின்பங் கொடுக்குஞ் சிவபிரானை வருந்தி இரந்து வழிபட்ட நாயகனுக்குச் சிற்

றின்பங் கொடுக்கும் நாயகியாகப் பாவிப்பதா? இரந்து பின் னிற்றன் முதலியனவுடைய நாயகனுகப் பாவிப்பதா? இங் கே பொருத்தமுஞ் சிறப்பும் யாது? இன்பசுகங் கொடுப் பவரினும் அதனைப் பெறுபவர் சிறந்தவரா? "புணர்ச்சியி லாயிழை" என்னுந் திருமந்திரத்தையும் நோக்குக.

பிள்ளையே!

எப்படியாயினுஞ் சிவபிரானை இழிந்த பெண்ணுகிய நாயகி என்றது சிவத்துரோகம் என்பீராயின், தேவாரத்தி லே "பெண்ணுடாணலியாய்ப் பிறவா வுருவானவனே" என்றதுஞ் சிவத்துரோகம்! திருவாசகத்திலே "பெண் ணுகி யாணுயலியாய்" என்றதுஞ் சிவத்துரோகம்! கந்தபுரா ணத்திலே "ஆண் பெண்ணுருவாய்ச் சராசரங்களானுன் சிவ ன்" என்றதுஞ் சிவத்துரோகம்! சித்தியாரிலே "அவளால் வந்த வாக்க மிவ்வாழ்க்கை யெல்லாம்" என்றதுஞ் சிவத்து ரோகம்! "சத்திதான் சிவத்தை யீன்றும்" என்றதுஞ்சிவத் துரோகம்! மேலும், திருவாசகத்திலே "இமவான் மகட்குத் தன்னுடைக்கேள்வன் மகன் றகப்பன் றமையன் எம்மை யன் ருள்கள்பாடி" என்றதுஞ் சிவத்துரோகம்! திருமந்திரத் திலே "பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதமை" என்றதுஞ் சிவத்துரோகம்! "இருட்டறை மூலையிருந்த குமரி, குருட்டுக் கிழவனைக் கூடல்குறித்து" என்றதும் சிவத்துரோகம்! குமரகுருபரசுவாமிகள் சிதம்பரச் செய் யுட்கோவையிலே "கனகமார்கவின் செய்மன்றி லனகநாட கற் கெம்மன்னே மனைவி தாய் தங்கை மகள்." என்றதுஞ்

சிவத்துரோகம்! திருவிளையாடலிலே சிவபிரான் இழிந்த பன்றிப் பாட்டியாய்க் குட்டிக்குப் பாலூட்டுவித்தார் என்றதுஞ் சிவத்துரோகம்! சுந்தரமூர்த்திநாயனார் சிவபிரானைப் பரவையார் வீட்டுக்கு இரவிலே தூது நடப்பித்ததுஞ் சிவத்துரோகம்! மாணிக்கவாசக சுவாமிகள் மேற்படி வாசகத்திலே "ஆராலுங் காண்டற்கரிய பிரானெமக் கெளிய பேராளன்" என்றதுஞ் சிவத்துரோகம்! கோவையாரிலே "கோங்கரும்புந் தொலைத் தென்னையு மாட்கொண்ட கொங்கைகளே." என்றதுஞ் சிவத்துரோகம்! இன்னுங் கோவையாரிலே உயிரெனவியத்த லென்னுந் துறையுடைய "நேயுத்ததாய் நென்னலென்னைப் புணர்ந்து" என்னுஞ் செய்யுளுரையிலே நச்சினார்க்கினியர் சிவபெருமானே தலைவியென்பது பெறப்பட வேறும் ஒரு பொருடொனித்து நின்றது என்றதுஞ் சிவத்துரோகம்! அதனை நாவலரவர்கள் அச்சிட்டதுஞ் சிவத்துரோகம்! அதற்கு மஹா வித்துவான் ஸ்ரீலஸ்ரீ மீனாக்ஷி சுந்தரப்பிள்ளை யவர்கள் சிறப்புப்பாயிரங் கொடுத்ததுஞ் சிவத்துரோகம்! அம்பலவாண பிள்ளை, அதனை அச்சிட்ட நாவலரவர் கண்மேலே சற்குரு மணிமாலை பாடியதுஞ் சிவத்துரோகம்! இதற்கு விலகுவார் யாவர்? இன்னும் நுங்கருத்தின்படி எத்தனையோ சிவத்துரோகம் வரும்! ஹா! ஹா! பாவம்! பாவம்!

பிள்ளையே!

கோவையாரிற் கூறிய நாயகனையும் நாயகியையும் நம் போலிகளாகிய ஒருநாயகனும் நாயகியுமாகத்தான் கொண்டீ

ரோ? "பலராகிய சீவர்களுக்குச் சிவபெருமானுகிய ஒருபெண்டாட்டியைக் கட்டிக் கொடுத்தீர்களே" என்று ஏன் புழுங்குகின்றீர்! உண்மையாக நோக்குவார்க்கு அந்த நாயகனும் நாயகியும் துவிதமாகுமா? "சொற்பால முதிவள் யான் சுவை" எனவும், "சிற்றம்பலத் தொருத்தன் குணந்தான் வெளிப்பட்ட" எனவுங் கோவையாரிலே வருவனவற்றைக்குரு முகமாகக் கேட்டுணர்க. நுங்கருத்தின்படி பல ஆன்மாக்களாகிய பெண்களுக்கு ஒருவராகிய சிவபிரானை நாயகராக்கினுல் அவர் தூர்த்தர் எனப்பட்டுச் சிவத்துரோகமாகாதா? பிள்ளையே!

இவற்றை யெல்லாஞ் சற்றும் உற்றுநோக்காது "திருக்கோவையாருண்மை" சிவத்துரோக நூல் என்றும் அது செய்தவர் சிவத்துரோக சிகாமணி என்றும் வாய் கூசாது பேசிவிட்டீர்! உம்மைப்போல விவேகியாவர்! கோவையாருண்மை செய்தவருடைய அபிப்பிராயம் யாது? காமநூல் என்று மயங்காது தாமறிந்த உண்மையை உலகமும் அறிந்துய்யவேண்டும் என்பதா? அதனைக் காட்டி யாதும் பொருளீட்ட வேண்டும் என்பதா? "காதிலே குண்டலங்கள் கையிலே செபமாலை கழுத்தின் மார்பின், மீதிலே தாழ் வடங்கண் மனத்திலே கரவட்மாம்" என்றபடி அவர் ஒரு வேடதாரியா? அவர் சிவத்துரோகி யாதற் கேது என்னை?

பிள்ளையே!

"இன்பசுகம் என்பதில் இன்பம் என்னை? சுகம் என்னை? இதுவுமோர் விசேடந்தான்" என்றீர். "ஒருமட

மாது மொருவனுமாகி யின்பசுகந்தர வன்புநிறைந்து" என்னும் உடற் கூற்றுவண்ணம் அறியீரோ? "துறவிலே யின்பசுகம்" என்ருர் பிறரும்.

பிள்ளேயே!

அவ்வளவி னில்லாது, "கோவையா ருண்மையை யாரோ ஏட்டில் வரைந்தவர் பாவம் ஈட்டிக்கொண்டார் என்றும், அவ்வளவினில்லாது சி. தம்பையாப் பிள்ளே அப்புரட்டு நூலே அச்சிட்டு வெளியிட்டார்" என்றும் நிந்திக்கிறீர்!

பிள்ளேயே!

இந்த நிந்தை, திருக்கோவையா ருண்மையைத் தாமே தம்முடைய கரத்தால் எழுதிப் போற்றி வந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கண் மேலும் ஏறுகின்றது! அந்நூலேப் பலமுறை பாராட்டிப் பார்த்து எழுதிக்கொள்ளும்படி அவர்களுக்குக் கொடுத்த திருவாவடுதுறை ஆதீனத்தார் மேலும் ஏறுகின்றது! நாவலரவர்கண் மேலே சற்குருமணி மாலேயால் இப்பொழுது தொடர்புகாட்டிய அம்பலவாணபிள்ளே மேலும் இறங்குகின்றது! வித்துவசிரோமணி ஸ்ரீமாந் பொன்னம்பலபிள்ளே யவர்களிடத்திலே கல்விகற்கும்போது அவர்களிடத்திலே திருக் கோவையாருண்மையைப்பூசிக்கும்படி எனக்குத் தரல்வேண்டும் என்று பெற்றுக் கண்ணிலொற்றிய காரைக்குடிச் சொக்கலிங்க செட்டியார் மேலும் இறங்குகின்றது! இச் சம்பவத்திலே உமக்குச் சந்தேகம் நிக

ழுமாயின், மேற்படி வித்துவ சிரோமணியவர்களிடங் கேட்டுத் தீர்க. இங்ஙனமே அவ் வுண்மையைக் கொண்டாடிய வித்துவான்கள் ஆதீனத்தார்முதலிய பலரும் அந்த நிந்தைக்கு ஆளாகின்றார்கள்! சிவ! சிவ! சிவ! பரிதாபம்! பரிதாபம்!

பிள்ளையே!

நீர் அதனை அச்சிட்ட வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ சி. தம்பையா பிள்ளை யவர்களை நிந்திக்கப் புகுந்து கோலத்தனிக் கொம்பரும்பர் புக்கஃதேகுறைப்பவர் தஞ்சிலமாய் நும்மையும் நும்மவரையும் நிந்தித்தவராயினீர்! அந்தோ!உமது அறியாமையையும் அநியாயத்தையும் ஆர்க்குரைப்பேம்!

பிள்ளையே!

"தங்கள் பிள்ளையவர்கள் [தம்பையாபிள்ளை] என்று எழுதுவதைப் பார்த்துத் தம்பேர் பிழையற எழுதத் தெரியாதவர் என்று பிறர் சொல்லுகின்றார்கள் அது என்பொறுப்பல்ல." என்று ஒன்று வரைந்தீர்! அங்ஙனஞ் சொன்னவர் யாவர்? அப்பிழைதான் யாது? ஈறுகெட்டு இயல்பாய் வருதலும் மிக்குவருதலும் ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு இயல்பாய் வருதலும் மிக்குவருதலும் ஆகிய இவற்றிற்கு ஆன்றோர் வழக்கும் இலக்கண விதியும் இடங்கொடுக்குமன்றோ! ஐயாசாமிமுதலியார், அம்பலவாணபிள்ளை, இராமலிங்கபிள்ளை என வரைந்த நாவலர் யாவர் என்று தேடிப்பாரும்! நுமது வாக்கியத்தால் நீர் இலக்கணம் வல்லுநர் அல்லீர் என்பது வெள்ளிடை மலைபோற் றெள்ளிதிற் புலப்ப

டக் கிடத்தலால் ஈண்டு இலக்கணவிதி காட்டா தொழிந் தேம். சொன்னவர் வெளிப்படுக பார்ப்பேம்.

பிள்ளையே!

அது நும்பொறுப்பல்லவாயின், பின்நாயகி பாவத்தை ஆராய்தல்தான் நும் பொறுப்பாய் முடிந்ததோ? உமது ஊராகிய சங்கானைக் கதிசமீபத்திலுள்ள சித்தங்கேணியார் ஒருவர் உம்மைப் போலவே தேவிகோட்டை வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ சிங்கயச் செட்டியாரவர்களை, தம்பெய ரெழு தத் தெரியாதவ ரென்று கூறி அவராற் கண்டிக்கப்பட்டுப் "பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப், பேதைவி னைமேற்கொளின்." என்ற திருக் குறட் கிலக்காயின்மை யால் வந்த வசை இன்று நின்றது. இச்சம்பவத்தை அவரி டங்கேட் டுணர்ந்து இனியாயினும் இப்படிப்பட்ட விஷய த்திற் றலையிட்டு அவமானமடையாமற் றப்பிக் கொள்ளுக.

பிள்ளையே!

இன்னும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்களுடையமாணு க்கராகிய ஸ்ரீமத் தியாகேச முதலியார் எழுதிய போலியருட் பா மறுப்பின் முதலிலே திருக்கோவையாருண்மையிலுள்ள ஒருபாகத்தைப் படியெடுத்தெழுதி "இவ்வாறு திருக்கோ வையாருண்மையிலே சொல்லப்பட்டது" என்று இறுதியில் எழுதியதை நீவிர் காணவில்லையா? நாவலரவர்கள் பாததூளி பெற்று அவர்கண்மீது சற்குருமணிமாலைபாடிய அம்பலவா ணபிள்ளை அந்நாவலர் அவர்கள் அங்கீகரித்ததை அவமதிப் பாரா?

பிள்ளையே !

திருக்கோவையா ருண்மையைப் புகழ்தலோடு, அச்சிட்ட மேற்படி பிள்ளையவர்களுக்குச் சிறப்புப் பாயிரங்கொடுத்த வித்துவசிரோமணி ஸ்ரீமாந் பொன்னம்பல பிள்ளை, சைவப் பிரசாரகர் ஏரம்பையர், சுன்னைக் குமார சுவாமிப் புலவர், சென்னைக் கல்யாணசுந்தர முதலியார் என்பவர்களுக்குப் "புரட்டு நூலை யச்சிட்டார்" என்பதனுலாய அபவாதம் பங்கில்லையா? இப்போது உம்மைக்கண்டித்தல் அவர்க்குங் கடனே !

பிள்ளையே !

இவர்கள் எல்லாராலும் அங்கீகரித்துப் பாராட்டப்பட்ட கோவையாருண்மையையா "சிவத்துரோக நூல்" என்றும் அது செய்தவரையா "உளறித்தள்ளிய மூடசிகாமணி" என்றும் பேசினீர்! இங்ஙனம் பேசுதற்கு நீர் யாவர்! உலகறிந்த ஒருமகானு? உம்முடைய பத்திரிகையிலுள்ள உளறுபடையை உமக்குக் காட்டுவா ரில்லையா? சற்றே காட்டுகின்றேன் பாரும்!

பிள்ளையே!

"சைவ சமயிகளே" என்பது முதலிய விளிகள் உளறுபடை! 'இந்நாள் வெளிவந் திருக்கிறது.' என்பது உளறுபடை! "அது உங்களுங்கள்" என்பது உளறுபடை! "இதைச் செய்தார்" என்பது உளறுபடை! "பெண்டாட்டி புருஷன்" என்பது உளறுபடை! "அவரே அந்தச்சிவ பெருமானே" என்பது உளறுபடை! "புருடராகத் தேடி" என்பது உள

றுபடை ! "சிவபெருமானுக்கு உயர்ந்தவன் சீவன்" என்பது உளறுபடை! "புத்தியீனந்தானே" என்பது உளறு படை! "விழித்துச் சொல்லுக" என்பது உளறுபடை !

பிள்ளையே !

இவ்வளவும் உமது முதற் பக்கத்திலுள்ள உளறுபடை! இவைகளைத் தமிழிலே உள்ளபடி வல்ல வித்துவான்களு க்குக் காட்டிக் கேட்பீராயின், அவர்கள் அறிவிப்பார்கள். உமக்குப் புலப்படா. உம்முடைய உளறுபடைகளைத் திரு த்திக்கொண்டு பின்னர் வெளிப்படும்.

பிள்ளையே !

உ-ம் பக்கத்திலே "நால்வர் பதிகங்களை" என்பது உளறுபடை! "வாக்கியங்களை" என்பது உளறுபடை! "அதி ன்படி" என்பது உளறுபடை! "சம்பந்தர்க்குத்தான்" என்பது உளறுபடை! "அப்பர் சுவாமி" என்பது உளறு படை! இப்படியே இரண்டு பக்கத்துள்ளே எத்தனையோ வழுக்கட் கிடனாக உளறிய நீர், நாவலரவர்கண் முதலியோ ரால் அங்கீகரிக்கப்பட்ட அவரை மூடசிகாமணி என்றற்கு யாவர்? பிழையற எழுத அறியாத நீர், கண்டனம் எழுதி அச்சிடவுந் துணிந்தீரா? கெட்டி! கெட்டி!

பிள்ளையே !

அவை நிற்க. திருக்கோவை யாருண்மை என்னும் நூல் சிவத்துரோக நூல் தானா? அது சைவராலே கொள்ளத் தக்கதா? தள்ளத் தக்கதா? என்பதைத் திருவாவடுதுறை

யாதீனத்தார், தருமபுரவாதீனத்தார், சூரனூர் கோவிலாதீனத்தார், மதுரை யாதீனத்தார் முதலிய ஆதீனத்தாரிடத்திலும், இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள சைவ வித்துவான்களிடத்திலுங் கேளும்; அவர்கள் நாம் மேலே சொல்லிய நியாயங்களையும் மறுத்து "அது சிவத்துரோக நூல், தள்ளத் தக்கது." என்பதற்கு நியாமுங் காட்டி, தங்கள் கையெழுத்தோடு வெளிப்படுவாராயின் சைவராகிய நாமெல்லாம் அங்கீகரிப்பேம்; அதுவன்றி உமது உளறுபடையால் ஆவதொன்றில்லை! இயலுமாயின், அங்ஙனஞ் செய்யும். அது கூடாதாயின் வாய் மூடுதலே உமக்கழகு! சிறப்புப் பாயிரத்தினுலே சில வித்துவான்கள் சம்மதம் வெளிப்பட்டது. அதனையும் உற்று நோக்குக.

பிள்ளையே!

"பரம புருடராகிய சிவனைப் பெண்டாட்டியாக்கிச் சீவனை அவனுக்குப் புருடனாக்கிய சிவத்துரோகங் கண்டிரங்கி மனஞ் சகிக்காது அன்பு மாத்திரத்தாலே லோகோபகாரமாக இதை எழுதினேன்." என்று உலகத்தை மருட்ட ஒன்று வரைந்தீர்! நீர் இது முக்காலுஞ் சத்தியம் என்றாலும் உலகம் நம்புமா? பாலர் மாதர் கோபாலரும் நம்பாரே! பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லல் வேண்டாமா? "பிரமதருக் கஸ்தவப் பிரகடன விருத்தம்" என ஒருபத்திரிகை கஅ பக்கத்தோடு வெளிப்பட்டதையும், அப் பத்திரிகையிலே அம்பலவாணபிள்ளை மொழிபெயர்த்த பிரமதருக் கஸ்தவத்திலுள்ள பிழைகளுள்ளே தக்கபிழைகள் பல நியா

யத்தோடும் பிரமாணத்தோடும் வரையப்பட் டிருத்தலையும், பிழைகள் யாவராலும் மறுக்கப்படாதனவே யென்று இந்து சாதனம் பாராட்டியதையும் உலகறியுமே. அதனை மறுக்கலாற்ருது முட்டுற்று அதனை இயற்றினர் தம்பையா பிள்ளை என்று கருதிய விபரீத சிந்தனையால் வந்த தென்பதையும் உலகறியுமே.

பிள்ளையே !

இங்ஙனமே முன்னுள்ள நூல்களிலும் பெரியோர்களிலுங்குற்றமேற்றிப் பாவத்தை யீட்டி எரிவாய் நிரயத்திற்கு ஆளாகாமல் விலகி யுய்க.

"கற்றது கைம்மண்ணளவு கல்லா வுலகளவென்
றுற்ற கலைமடந்தை யோது கிருள்."

"முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க."

திருச்சிற்றம்பலம்.

இனிமேல் அச்சிடப்படும் புத்தகங்கள்.

---

1. சிவத்துரோககண்டன தூரீகரணம்.
2. வச்சிர தண்டம்.
3. குயுத்தி யென்பதற் கிட்ட வைரக்குப்பாயம்.
4. வர்ணன விரோத தரிசனம்.